மலர் 1 இதழ் 2 அக்டோபர், 2016 ISSN : 2454-3993

# காரைக்கால் அம்மையாரும் ஏழு சுரங்களும்

நா.பிரதீபா
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை,
பூ.சா.கோ கலை அறிவியல் கல்லூரி, கோவை

## முன்னுரை

"தென்னிந்திய இசையின் தாய்" என்று அழைக்கப்படுபவர் காரைக்கால் அம்மையார். பக்தி இலக்கிய வளர்ச்சிக்கும், இசை வளர்ச்சிக்கும் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கும் வித்திட்ட பெருமை அம்மையாரையே சாரும். அம்மையாருக்குப் பின் தோன்றிய தேவாரம் பாடிய மூவர் எண்ணிக்கை அளவில் அதிகமாகப் பாடல்களைப் பாடியிருந்தாலும் பாடும் உரை, பதிக அமைப்பு, கருத்து அமைப்பு. பண் முதலியவற்றிற்கு வழிகாட்டியாக இருந்தவர் அம்மையாரே. இத்தகு சிறப்பு மிக்க அம்மையார் பாடிய திருவாலங்காட்டு மூத்த முதல் திருப்பதிகத்தில் ஏழு சுரங்களைக் குறித்துப் பாடியுள்ளார். இச்சுரங்களைக் குறித்து ஆய்வதாக இக்கட்டுரை அமையப் பெறுகின்றது.

## மூத்த திருப்பதிகம்

பதிகம் என்பது பத்துப் பாடல்கள் கொண்டது. பதிகம் என்ற அமைப்பிற்கு காரைக்கால் அம்மையாரே முன்னோடி. ஆதலால் இவர் இயற்றியது "மூத்த திருப்பதிகம்" என்று அழைக்கப்படுகிறது. அம்மையாரைப் பின்பற்றியே தேவார மூவர், ஆழ்வார்கள், மாணிக்கவாசகர் பதிக அமைப்பில் பாடல்களை இயற்றியுள்ளார்கள். தெய்வத்தைப் பாடுபொருளாகக்கொண்டு பக்தி நெறியில் பாடப்பட்ட பத்துப் பாடல்களே பதிகம் எனப் பெயர் பெற்றுள்ளன.

மூத்த திருப்பதிகத்தில் முதல் திருப்பதிகம் நட்டப்பாடை பண்ணிலும், எண்சீர்க் கழி நெடிலடி ஆசிரிய விருத்தாலும், இரண்டாம் திருப்பதிகம் அறுசீர் கழி நெடிலடி ஆசிரிய விருத்தாலும் இந்தளப் பண்ணிலும் பாடப்பட்டுள்ளது.

## ஏழு சுரங்கள்

"துத்தம் கைக்கிள்ளை விளரி தாரம்
உழை இளி யோசை பண் கெழுமப்பாடி"(பா.11.1.9)

மூத்த திருப்பதிகத்தின் ஒன்பதாம் பாடலில் ஏழுசுரங்களின் தமிழ் பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இதில் துத்தம் கைக்கிளை விளரி தாரம் உழை இளி என்ற முறையில் நரம்பின் (சுரங்களின்) பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன. மேற்கூறிய அடியில் ஆறு இசை நரம்புகளின் பெயர்களைத் தந்துள்ளார். இதில் குரல் நரம்பைக் குறிப்பாகக் கொள்ளுதல் வேண்டும். இந்த நரம்புகளுள் ஒன்றையொன்று முதலாகக் கொண்டு பல பண்கள் பிறக்கும் என்று "ஓசை பண்கொழுமப்பாடி" என்று குறிப்பால் காட்டியுள்ளார்.

**ஏழு சுரங்களின் விளக்கம்**

குரல் குறிப்பாகக் கொள்ளப்பட்டதால் அடுத்த நரம்பான துத்தம் என்ற சுரம்.

**துத்தம்**

இது இரண்டாம் நரம்பு(சுரம்). தற்போது ரிஷபம் என்று அழைக்கப்படுகிறது. இதன் குறியீடு(ரி) குரலைக் காட்டிலும் சற்று உயர்ந்த ஒலி துத்தம் ஆகும். இது மென் துத்தம்($ரி_1$) வன்துத்தம்($ரி_2$) என இருவகைப்படும். காரைக்கால் அம்மையார் தன் பதிகத்தில் இந்தளப் பண்ணில் மென் துத்தத்தையே பாடியுள்ளார்.

**கைக்கிளை**

இது மூன்றாவது நரம்பு. இது தற்போது காந்தாரம் என்று அழைக்கப்படுகிறது. இதன் குறியீடு "$க_1$"என்பது கை ூ கிளை ஸ்ரீ கைக்கிளை. கை என்பது சிறுமை, கிளை என்பது உறவு குரலுடன் சிறிய உறவு கொண்டுள்ள நரம்பு (சுரம்). இதுவும் மென் கைக்கிளை ($க_1$) வன் கைக்கிளை ($க_2$) என இருவகைப்படும். காரைக்கால் அம்மையார் இரு பண்களிலும் (நட்டபாடை, இந்தளம்) வன் கைக்கிளையையே பாடியுள்ளார்.

**உழை**

இது நான்காம் நரம்பு. இது தற்போது மத்யமம் என்று அழைக்கப்படுகிறது. இதன் குறியீடு "ம" என்பது உழை என்றால் பக்கம் என்று பொருள். உழையர் என்பது பக்கத்தில் இருப்பவர். இந்த நரம்பு சுற்றம் போல குரலுடன் ஒத்திசைக்கும் காரணத்தால் உழை எனப்படுகிறது. இதுவும் மென்உழை ($ம_1$) வன்உழை ($ம_2$) என இருவகைப்படும். காரைக்கால் அம்மையார் இரு பண்களிலும் (நட்டபாடை, இந்தளம்) உழையையே பாடியுள்ளார்.

**இளி**

இது ஐந்தாம் நரம்பு (சுரம்). தற்போது பஞ்சமம் என்று அழைக்கப்படுகிறது. இதன் குறியீடு "ப" இந்த நரம்பு குரலைப் போல பேதமற்றது. ஆகையால் இதில் வன்சுரங்கள், மென்சுரங்கள் கிடையா. இந்த சுரம் குரலுடன் இணையாக ஒத்திசைப்பதால் குரல் - இளி உறவு கொண்டுள்ள சுரங்கள் இடைச்சுரங்கள் என்று அழைக்கப்படும்.

**விளரி**

இது ஆறாம் நரம்பு (சுரம்). தற்போது தைவதம் என்று அழைக்கப்படுகிறது. இதன் குறியீடு "த" என்பது. இது மென்மையான ஒலியாகும். இது இளியை அடுத்துச் சற்று

உயர்ந்த ஒலி. இதற்குரிய மென்மையான நெய்தல் பண் விளரிப் பண்ணாகும். இதுவும் மென் விளரி (த$_1$) வன் விளரி (த$_2$) என இருவகைப்படும். காரைக்கால் அம்மையார் இந்தளப் பண்ணில் மென் விளரியையே பாடியுள்ளார்.

**தாரம்**

இது ஏழாம் நரம்பு(சுரம்). தற்போது நிஷாதகம் என அழைக்கப்படுகிறது. இதன் குறியீடு "நி" என்பது. தாரத்தை எடுத்த ஓசை என்று கழகக் கை அகராதி கூறுகிறது. தார் என்பது முன்னோங்கி நீண்டு உயர்ந்திருப்பது எனப் பொருள்படும். இதுவும் மென்தாரம்(நி$_1$) வன்தாரம்(நி$_2$) என இருவகைப்படும். காரைக்கால் அம்மையார் இரண்டுப் பண்களிலும் (நட்டபாடை, இந்தளம்) வன்தாரத்தையே(நி$_2$) பாடியுள்ளார்.

**முடிவுரை**

தென்னிந்திய இசையின் அடிப்படை மூலாதாரமே ஏழு சுரங்களாகும். அம்மையாரின் மூத்த திருப்பதிகங்கள் பதிக அமைப்பிற்கு முன்னோடியாக விளங்குவது போல இசைக் களஞ்சியமாகவும் விளங்குகின்றன. அம்மையாரின் இசை ஞானத்தை வெளிப்படுத்தக்கூடிய கருவூலமாக அவரின் பாடல்கள் அமையப்பெற்றுள்ளன.